# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.181/2015பே.2**
**ஆணை எண்.27/2018/நாள்.19 –02–2018**

**திரு எம். கனகராஜன்,**
**சமூக ஆர்வலர்,**
**26–பி, கடலூர் மெயின் ரோடு,**
**புவனகிரி,**
**கடலூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்**

## ஆணை

திரு எம். கனகராஜ், 26 B-மெயின் ரோடு, புவனகிரி, கடலூர் மாவட்டம் என்பவரின் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்ட 03.11.2014ம் நாளிட்ட புகார் மனு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 18110/2014/இ.2/நாள்.22.01.2014ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 06.05.2016 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 181/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

திரு எம். கனகராஜ், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

1. புயல் சேதத்திற்கென வரப்பெற்ற ஒதுக்கீட்டினை கையாடல் செய்துள்ளனர்.
2. பேரூராட்சியில் I.U.D.M.திட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது.
3. பேரூராட்சி பகுதியில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் சரியான அளவுகளில் இல்லாமலும் மக்கள் உபயோகம் இல்லாத இடத்திலும் செய்துள்ளனர்.

4. பேரூராட்சியில் பணிபுரியும் தினக் கூலி பணியாளரை தனது காருக்கு ஓட்டுநராக பயன்படுத்தியுள்ளார்.
5. பேரூராட்சித் தலைவர் தனது வீட்டிற்கு பேரூராட்சி மன்றத்தில் ஒப்புதல் பெறாமல் இரண்டு அடுக்கு மாடி கட்டியுள்ளார்.
6. மேற்படி வீட்டிற்கு குறைவான வீட்டு வரி விதித்துள்ளது.
7. மாநில ஊரமைப்புத் துறையின் அனுமதியில்லாமல் நஞ்சை நிலமாக உள்ள நிலத்தில் தனது கணவர் பெயரில் வீடு கட்டி வீட்டு வரி ரசீது போட்டுள்ளது.
8. உள்ளாட்சி விதிகளுக்கு புறம்பாக பினாமி பெயரில் ஒப்பந்த பணிகளை எடுத்து செய்துள்ளது.
9. பேரூராட்சி விதிகளின்படி நான்கு கூட்டங்களுக்கு வராத 14வது வார்டு உறுப்பினரை ஐந்தாவது முறையாக கூட்டத்திற்கு அழைப்பு கொடுத்து கலந்து கொள்ள செய்துள்ளது.
10. பேரூராட்சியில் உள்ள குளங்கள் மீன் பிடி ஏலங்களை முறையாக நடத்தாமலும், வணிக வளாகம், நாளங்காடிகள் நீண்ட நாட்களாக குத்தகை புதுப்பிக்கப்படாமல் உள்ளது. இதன் மூலம் பேரூராட்சிக்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளது.

மேற்கண்டவாறு பல்வேறு புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 12.09.2015ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரரை இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி மேற்படி புகார் மனு குறித்து தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்ய ஆணையிடப்பட்டது. மேலும் முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 விதி 6ன் படி கட்டணமாக ரூ 10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் உரிய படிவத்தில் (படிவம்–1)ல் விண்ணப்பிக்கவும் ஆணையிடப்பட்டது.

மேற்படி அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 20.10.2016 அன்று நேரில் ஆஜராகி தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரை முறையீட்டு மனு தொடர்பான விளக்கங்களை பதிவு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவ 23.08.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 19.09.2017 ஆஜராக ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 19.09.2017 அன்று ஆஜராகி தனது தரப்பிலான விளக்கத்தினை பதிவு செய்துள்ளார்.

இதனிடையே மேற்படி முறையீட்டு மனுதாரர் இதே பொருள் தொடர்பாக புவனகிரி பேரூராட்சி முன்னாள் தலைவர் திருமதி. வள்ளி சச்சிதானந்தம் மற்றும் முன்னாள் துணைத் தலைவர் திரு என். ராம்குமார் ஆகியோர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி நடவடிக்கைக் கோரி 01.11.2014ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் சமர்ப்பித்துள்ள புகார் மனு மீது முதற்கட்ட விசாரணை 25.11.2014ல் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரம் முறையீட்டு மனுதாரருக்கும் இம்முறைமன்ற நடுவ23.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள இப்பொருட்பாடு குறித்து, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன்படி இம்முறைமன்ற நடுவ நவிசாரணை நடவடிக்கைகள் தற்போது கைவிடப்படுகிறதென தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் வருடம் பிப்ரவரித் திங்கள்19– ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

**செயலாளர்.**

23/2/18

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

22/2/18

**பெறுநர்**

1.திரு எம். கனகராஜன்,
சமூக ஆர்வலர்,
26–பி, கடலூர் மெயின் ரோடு,
புவனகிரி,
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

**நகல்**

1.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை, கடலூர்.

இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்,
எம்.கே.என். ரோடு,
ஆலந்தூர்,
சென்னை – 600 016